**Date:** 10.08.26

சென்னை உயர் நீதிமன்றத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட 5 நிரந்தர நீதிபதிகள் மற்றும் 10 கூடுதல் நீதிபதிகளுக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி நேற்று உயர் நீதிமன்ற கலையரங்கில் நடைபெற்ற விழாவில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பாரம்பரியமிக்க சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 19 பேரை நீதிபதிகளாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருந்தது. இதில் 8 வழக்கறிஞர்கள், 7 மாவட்ட நீதிபதிகள் என மொத்தம் 15 பேரை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கடந்த 7-ம் தேதி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து புதிய நீதிபதிகள் பதவியேற்பு விழா, உயர் நீதிமன்ற கலையரங்கில் நேற்று

---

வாலாஜாபாத்தில் 2-ம் இராஜாதிராஜன் குறித்த 12-ம் நூற்றாண்டு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் ஈழப்போர் வெற்றி, அவரது படைத்திறன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பகுதியில் நிலவிய ஆட்சி முறை, நிலக்கொடைகள், வரலாற்றுப் பெருமைகள் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

---

CHENNAI

காஞ்சிபுரம் கச்சபேஸ்வரர் கோயில் கல்வெட்டில் 'பெரிய பொன்னம்பலம்' என்ற நாட்டிய மகளின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் ஆடலாசிரியராக இருந்ததுடன் இறைப்பணிக்காகவும், கோயிலில் விளக்கெரிக்கவும் தங்கம், நிலங்களைத் தானமாக வழங்கியுள்ளார்.

---

பிரதமர் மோடியின் 'வளர்ச்சியடைந்த பாரதம் போதைப் பொருளுக்கு எதிரான இளைஞர்கள் உறுதிமொழி இயக்கம்' கடந்த 2-ம் தேதி காணொலி வாயிலாக தொடங்கப்பட்டது. இளைஞர்களை போதைப் பொருளின் பாதையிலிருந்து மீட்பதுடன்,

---

CHENNAI

**20%**

மறுசுழற்சி செய்யப்பட்ட நீர் மூலம் நகரங்களின் மொத்த நீர்த் தேவையில் குறைந்தது 20% அளவைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்று மத்திய அரசின் 'அம்ருத் 2.0' திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

---

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடைசெய்யும் ‘போக்சோ’ சட்டம் அறிவுறுத்தியுள்ளபடி, பாதிக்கப்பட்ட குழந்தையிடம் 30 நாள்களுக்குள் விசாரணையை நடத்த வேண்டும் என 2024இல் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையை போக்சோ நீதிமன்ற விசாரணை அதிகாரிகளுக்கு மீண்டும் அனுப்பும்படி பதிவாளர் ஜெனரலுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இது தொடர்பான பயிற்சி, தமிழ்நாடு நீதித் துறை அகாடமி சார்பாக விசாரணை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் என்பதும் தீர்ப்பின் ஓர் அங்கம்.

தமிழ் நிலங்கள் ஐந்தில், மலையாகிய குறிஞ்சிக்குத் தெய்வம் முருகன், காடாகிய முல்லைக்குத் தெய்வம் திருமால், வயலாகிய மருதத்துக்குத் தெய்வம் வேந்தன், கடலாகிய நெய்தலுக்குத் தெய்வம் வருணன் என்று நான்கு நிலங்களுக்கும் ஆண் தெய்வங்களையே காட்டுகிறார் தொல்காப்பியர்.

தமிழ் மரபில், வருணனுக்கும் முந்தைய கடல்புறத் தெய்வம் கடல்கெழு செல்வியாகிய குமரிதான். திருமாலுக்கும் முந்தைய காட்டுப்புறத் தெய்வம் காடமர் செல்வியாகிய கொற்றவைதான். முருகனுக்கும் முந்தைய மலைப்புறத் தெய்வம் முருகனுக்குத் தாயும் மலைவளர் செல்வியுமாகிய மலையரசிதான். காட்டைத் திருத்தித்தான் நாடாக்கினார்கள் என்பதால், வேந்தனுக்கும் முந்தைய வயல்புறத் தெய்வமும் திருவளர்செல்வியாகிய பூவாத்தாள்தான்.

---

பொது அறிவு: **குழந்தையின் பாலினத்தை 100% தீர்மானிப்பது தந்தையின் விந்தணுவில் உள்ள குரோமோசோம்கள் ஆகும். தாயின் ‘X’, தந்தையின் ‘X’ குரோமோசோம்கள் இணைந்தால் பெண் குழந்தை உருவாகும். தாயின் ‘X’, தந்தையின் ‘Y’ குரோமோசோம்கள் இணைந்தால் ஆண் குழந்தை உருவாகும்.**

---


# சட்ட ஆணைய தலைவராக நீதிபதி டி.கிருஷ்ணகுமார் நியமனம்

**சென்னை**

தமிழ்நாடு மாநில சட்ட ஆணையத்தின் தலைவராக நீதிபதி டி.கிருஷ்ணகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசின் சட்டத்துறை செயலர் பி.சுமதி வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழ்நாடு மாநில சட்ட ஆணையத்தைதமிழக அரசுமாற்றியமைத்துள்ளது. அதன்படி, சட்ட ஆணையத்தின் தலைவராக மணிப்பூர் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் கூடுதல் தலைமைச் செயலர் டி.கே.ராமச்சந்திரன், சட்டத்துறை முன்னாள் செயலர் ஏ.அருணகிரி ஆகியோர் ஆணையத்தின் முழுநேர உறுப்பினர்களாகவும், முன்னாள் மாவட்ட நீதிபதிகள் பி.மோகன்தாஸ், ஆர்.கோவிந்தராஜன் ஆகியோர் பகுதிநேர உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். சட்டத்துறையில் செயலர் அந்தஸ்தில் உள்ள அதிகாரி முழுநேர உறுப்பினர்-செயலராக செயல்படுவார்.



டி.கிருஷ்ணகுமார்

**ஆணையத்தின் பணிகள்**

மாநில சட்ட ஆணையம், தற்போது இருக்கின்ற சட்டங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளை அரசுக்கு வழங்கும். சமூக பொருளாதார சட்ட நடவடிக்கைகளையும் அரசுக்கு பரிந்துரை செய்யும். மேலும் மாநிலங்களுக்கு இடையிலான உறவுகளையும், மத்திய-மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளையும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் ஆலோசனை வழங்கும். மாநில அரசு தொடர்புடைய மத்திய அரசு சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் தொடர்பாகவும் அரசுக்கு ஆலோசனை வழங்கும்.

**பதவிக்காலம்**

மாநில சட்ட ஆணையத்தின் தலைவர், முழுநேர மற்றும் பகுதிநேர உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிக்காலம் 3 ஆண்டுகள் ஆகும். இந்த ஆணையம் சென்னை கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் உள்ள சிட்கோ கட்டிடத்தின் 5-வது தளத்தில் செயல்படும்.

இவ்வாறு அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

**சார்-பதிவாளர், நகராட்சி ஆணையர் உள்ளிட்ட பதவிகளுக்கு**

# குரூப்-2 தேர்வு அறிவிப்பு நாளை வெளியாகிறது

**காலியிடங்கள் அதிகம் இருக்கும் என தேர்வர்கள் எதிர்பார்ப்பு**

**சென்னை**

டிஎன்பிஎஸ்சி குரூப்-2, குரூப்-2 ஏ தேர்வுக்கான அறிவிப்பு நாளை (11-ம் தேதி) வெளியிடப்படுகிறது. காலிப்பணியிடங்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கும் என தேர்வர்கள் எதிர்பார்க்கின்றனர்.

உள்ளிட்ட பதவிகளை நிரப்ப ஒருங்கிணைந்த குரூப்-2, குரூப்-2-ஏ தேர்வை டிஎன்பிஎஸ்சி நடத்துகிறது. கடந்த 2025-ம் ஆண்டு 595 காலிப்பணியிடங்களை நிரப்பும் வகையில் குரூப்-2, குரூப்-2ஏ தேர்வுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. பின்

வாறு அனைத்து தேர்வுகளுக்கும் குறித்த தேதியில் அறிவிப்பு வெளியிடப்பட்டு தேர்வுகள் நடத்தப்படும் என டிஎன்பிஎஸ்சி தலைவர் எஸ்.கே.பிரபாகர் ஏற்கெனவே அறிவித்துள்ளார்.

அதன்படி, ஒருங்கிணைந்த

சார வாரியம், அரசு போக்குவரத்துக்கழக இளநிலை உதவியாளர் உள்ளிட்ட புதிய பதவிகளும் முதல்முறையாக இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு துறைகளில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட காலிப்

---



**பிரதமரின் "ஃபிட் இந்தியா" இயக்கம் நாடு முழுவதும் மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. 10,000-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சைக்கிளை இயக்குவதன் மூலம் இந்த இயக்கத்தை மக்களிடம் எடுத்துச் செல்கின்றனர்.**

**மன்சுக் மாண்டவியா** மத்திய விளையாட்டு அமைச்சர்

# தொகுதி மறுவரையறை மசோதா ஓர் அரசியல் சதி

**தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் கண்டனம்**

**சென்னை**

மத்திய பாஜக அரசு கொண்டு வரத் துடிக்கும் தொகுதி மறுவரையறை மசோதா இந்தியாவின் இறையாண்மை, கூட்டாட்சித் தத்துவத்தை சீர்குலைக்கும் மிகப்பெரிய அரசியல் சதி என்று தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது 'எக்ஸ்' வலைதளப் பதிவில் கூறியுள்ளதாவது:

கடந்த ஏப்.17-ம் தேதி இண்டியா கூட்டணியால் மக்களவையில் தோற்கடிக்கப்பட்ட ஆபத்தான தொகுதி மறுவரையறை மசோதாவை, '50 சதவீத தொகுதி உயர்வு' என்ற ஆசையைக் காட்டி கட்டுப்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய தமிழகத்துக்கு தண்டனையும், மக்கள் தொகையை கட்டுப்படுத்த தவறிய வட மாநிலங்களுக்குப் பரிசும் அளிப்பது அப்பட்டமான அநீதி.

தொகுதி எண்ணிக்கையை 50 சதவீதம் உயர்த்தினால், உத்தரப் பிரதேசத்தின் தொகுதிகள் 80-ல் இருந்து 120 ஆகவும், தமிழகத்தின் தொகுதிகள் 39-ல் இருந்து 59 ஆகவும் உயரும். இதனால் இரு மாநிலங்களுக்கும் இடையிலான தொகுதி இடைவெளி 41-ல் இருந்து 61 ஆக விரிவடையும். நாடாளுமன்றத்தில் இந்த இடைவெளி அதிகரிப்பது தென் மாநிலங்களின் அரசியல் அதிகாரத்தை நிரந்தரத்தை சீர்குலைக்கும் மிகப்பெரிய அரசியல் சதி.

கடந்த காலத்தில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி மற்றும் 2001-ல் வாஜ்பாய் ஆகியோர் கொண்டு வந்த சட்டத் திருத்தங்கள் மூலமாக மக்களவைத் தொகுதி எண்ணிக்கை முடக்கி வைக்கப்பட்டது. அந்த பாதுகாப்பை தகர்க்கவே பாஜக தற்போது முயற்சிக்கிறது.

மேலும், சாதிவாரிக் கணக்கெடுப்பை முடிக்கும் முன்பே இதை செய்தால், பட்டியலின, பழங்குடியின மற்றும் பெண்களுக்கான இடஒதுக்கீடு தொகுதிகளை சரியாக தீர்மானிக்க முடியாது. எனவே, தமிழகத்துக்கு துரோகம் இழைக்கும் இந்த மசோதாவை வீழ்த்த அனை

## இந்திய வீரர்களுக்கு பிரதமர் பாராட்டு

புதுடெல்லி

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற இந்திய வீரர், வீராங்கனைகளை பிரதமர் மோடி நேரில் அழைத்துப் பாராட்டு தெரிவித்தார். அண்மையில் கிளாஸ்கோவில் நடைபெற்ற 23-வது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்தியா 39 பதக்கங்களை வென்றது. இதையடுத்து நாடு திரும்பிய இந்திய வீரர், வீராங்கனைகள் நேற்று டெல்லியிலுள்ள பிரதமர் மோடி இல்லத்தில் அவரைச் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இதைத் தொடர்ந்து அனைத்து வீரர், வீராங்கனைகளுக்கும் பாராட்டு தெரிவித்த பிரதமர் மோடி அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள், வீடியோக்களை தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

## பசந்த் குமாருக்கு வெள்ளி

புதுடெல்லி

உலக தடகளப் போட்டியின் (20 வயதுக்குட்பட்டோர்) உயரம் தாண்டுதல் பிரிவில் இந்திய வீரர் பசந்த் குமார் மேக்வால் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

## தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முதலிடம்: இன்று பேரவையில் தீர்மானம்

**சென்னை, ஆக. 9:** தமிழகத்தில் அனைத்துக் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவது கட்டாயம் என்பது தொடர்பான அரசு தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் திங்கள்கிழமை நிறைவேற்றப்படவுள்ளது. இந்தத் தனித் தீர்மானத்தை பேரவையில் முதல்வர் ச.ஜோசப் விஜய் முன்மொழிகிறார்.

மனோன்மணீயம் சுந்தரனாரால் 1891-இல் எழுதப்பட்ட 'மனோன்மணீயம்' எனும் நாடக நூலின் பாயிரத்திலிருந்து எடுக்கப்பட்ட 'தமிழ்த்தாய் வாழ்த்து', 1970 நவ.23-ஆம் தேதி முதல் அரசு விழாக்களில் முதலில் பாடப்பட வேண்டும் என அரசாணை வெளியிடப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

2021 டிச.12-ஆம் தேதி முதல் மாநிலப் பாடலாக அதிகாரபூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டு, தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்துக் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும் நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்படும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் முதலில் பாடப்பட வேண்டும் என பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

# 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் ஒவ்வொரு இந்தியருக்கும் உத்வேகம்

**புது தில்லி, ஆக. 9:** வரலாற்றுச் சிறப்புமிக்க 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்றவர்களின் துணிவு, ஒவ்வொரு இந்தியருக்கும் என்றென்றும் உத்வேகமளிப்பதாக நிலைத்திருக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

தேசப் பிதா மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் கடந்த 1942, ஆக.9-ஆம் தேதி தொடங்கப்பட்ட வெள்ளையனேவெளியேறு இயக்கம், நாட்டின் சுதந்திர வேட்கைக்கு தீர்க்கமான உந்துசக்தியாக அமைந்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தை வரையறுக்கும் முக்கிய மைல்கற்களில் ஒன்றான இந்த இயக்கம் தொடங்கப்பட்டதன் 84-ஆம் ஆண்டு தினம் ஞாயிற்றுக்கிழமை (ஆக.9) கடைப்பிடிக்கப்பட்டது.

இதையொட்டி, பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'வரலாற்றுச் சிறப்புமிக்க வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்ற அனைவரையும் நினைவுகூர்கிறேன். அவர்களின் துணிவு, ஒவ்வொரு இந்தியருக்கும் என்றென்றும் உத்வேகமளிப்பதாக நிலைத்திருக்கிறது. வெள்ளையனே வெளியேறு என்ற முழக்கம், நாட்டின் சுதந்திரப் போராட்டத்துக்கு புத்தாற்றலை ஊட்டியதுடன், காலனித்துவ ஆதிக்கத்தில் இருந்து விடுபடும் மக்களின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை பிரதிபலித்தது' என்று குறிப்பிட்டுள்ளார்.



**வீடுகள்தோறும் மூவர்ணக் கொடி: மக்களுக்கு பிரதமர் வலியுறுத்தல்:** நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, வீடுகள்தோறும் மூவர்ணக் கொடி ஏற்றும் பிரசாரம் ஞாயிற்றுக்கிழமை (ஆக.9) தொடங்கியது. ஆக.17 வரை நடைபெறும் இந்தப் பிரசாரத்தில் மக்கள் உற்சாகத்துடன் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'மூவர்ணக் கொடி நமது பெருமை; நாட்டுக்கு சிறப்பாக பங்களிக்க எப்போதும் நம்மை ஊக்குவிக்கும் நிலையான ஆதாரம் அது. எனவே, வீடுகள்தோறும் மூவர்ணக் கொடி பிரசாரத்தில் ஆர்வத்துடன் பங்கேற்று, வளர்ந்த பாரதத்தைக் கட்டமைக்கும் கூட்டுறுதியை புதுப்பிப்போம். நடப்பாண்டு இந்தப் பிரசாரம், தேசியப் பாடலான வந்தே மாதரத்தின் 150 ஆவது ஆண்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டு இருப்பது கூடுதல் மகிழ்ச்சி' என்று தெரிவித்துள்ளார்.